# நிதி ஆணைக்குழு

## இலங்கை அரசியல் அமைப்பின்
## அதிமேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் - (2017)

செப்டெம்பர் - 2016

සභාපති
தலைவர்
Chairman
(+94) 011 2556840

ලේකම්
செயலாளர்
Secretary
(+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office
(+94) 0112556833
0112556834

ෆැක්ස්:
தொலைநகல
Fax
(+94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்
e-mail
fincom@sltnet.lk

# මුදල් කොමිෂන් සභාව

( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 'ජ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)

# நிதி ஆணைக்குழு

(அரசியலமைப்பின் 154`எ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)

# FINANCE COMMISSION

(Established under Article 154 R of the Constitution)

48, වජිර පාර,
කොළඹ 04.

48, வஜிரா வீதி,
கொழும்பு-04, இலங்கை

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.

මගේ අංකය / எனது இல / My No: FC/ 3/1/2017

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 20. Sep. 2016

அதிமேதகு மைத்ரீபால சிறிசேன
ஜனாதிபதி - இலங்கை ஜனநாயக சோ'லிச குடியரசு
ஜனாதிபதி செயலகம்
கொழும்பு – 01.

மேதகு ஜனாதிபதி அவர்களே,

இலங்கை ஜனநாயக சோ'லிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்த சட்டமூலத்தின் சரத்தின் 154 ஆர் உருப்புரைக்கு அமைய மாகாணங்களுக்கு 2017ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகள் தொடர்பான பரிந்துறைகள் மற்றும் நாட்டில் சமத்துவமான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கான முன்மொழியப்பட்டுள்ள உபாயங்களையும் நான் சமர்ப்பிக்கின்றேன்.

அரசியல் அமைப்பின் 154 ஆர் (7) அமைய இப்பரிந்துறைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

இப்படிக்கு,

உதித்த எச். பலிஹக்கார
தலைவர் - நிதி ஆணைக்குழு

# உள்ளடக்கம்


நிறைவேற்று சுருக்கம் ........ 1

1. அறிமுகம் ........ 3

2. நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களும் வகிபாகமும் ........ 3

3. மாகாண சபைகளுக்கிடையில் அரச நிதியைப் பகிர்ந்தளித்தல் ........ 4

 3.1 மூலதனச் செலவிற்கான மாகாண வகுபடும் நிதித் தொகுதி ........ 4

4. மாகாண வருமானம் ........ 6

 4.1 அரசாங்க வருமானத்தின் மூலமான மாற்றல்கள் ........ 6

 4.2 அதிகாரம் பகிர்வளிக்கப்பட்ட வழிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் ........ 8

 4.3 2017 ஆம் ஆண்டிற்கான வருமான எதிர்வுகூறல் ........ 8

  4.3.1 அரசாங்க வருமானங்களில் இருந்தான மாற்றல்கள் ........ 9

  4.3.2 அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான வருமான இலக்குகள் ....9

5. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல். ........ 10

 5.1 மூலதன தேவைகளை மதிப்பீடு செய்தல் ........ 10

 5.2 மீண்டெழும் செலவுகளை மதிப்பீடு செய்தல். ........ 11

 5.3 2017 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகள் ........ 12

 5.4 மாகாண சபைகளுக்கு மூலதன மற்றும் மீண்டெழும் நிதியினைப் பகிர்ந்தளித்தல். ........ 12

6. எதிர்நோக்கும் சவால்கள் ........ 15

 6.1 உள்ளக வருமான உருவாக்கம். ........ 15

 6.2 அழுத்தத்திற்கு உட்படுத்துதல் ........ 15

 6.3 ஒரே வேலையை அரசும் மாகாண சபைகளும் செய்வதைத் தவிர்த்தல் ........ 15

 6.4 வருடாந்த வேலைத்திட்டத்தை அடிக்கடி மாற்றம் செய்தல் ........ 16

 6.5 பொறுப்புக் கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியின் தேவைகளை மேம்படுத்தல். ........ 16

7. முடிவுரை ........ 16

8. மாகாண சபைகளின் சிறந்த செயலாற்றுகைக்கான பரிந்துரை ........ 18

9. முன்னோக்கிய நகர்வு ........ 19

## அட்டவணைகள்


| | | | |
|---|---|---|---|
| அட்டவணை | 1: | தேசத்தைகட்ஊடியெழுப்பும் வரிமற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாணசபைகளுக்கிடையில் பகிரப்படும் வீதம் | 7 |
| அட்டவணை | 2: | அரசாங்கவருமானமாற்றல்கள் | 7 |
| அட்டவணை | 3: | அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்துசேகரிக்கப்பட்ட வருமானம் - 2016* (ஜுன் வரை) | 8 |
| அட்டவணை | 4: | மாகாணங்களுக்கானமதிப்பிடப்பட்டுள்ளஅரசாங்கவருமானத்தில் இருந்தானமாற்றல்கள் - 2017 | 9 |
| அட்டவணை | 5: | அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டவருமான மூலங்களில் இருந்தானஎதிர்வு கூறப்பட்டவருமாணம் - 2017 | 10 |
| அட்டவணை | 6: | மூலதனமற்றும் மீண்டெழும் தேவைகளுக்கானமாகாணசபைகளின் கோரிக்கைகள் - 2017 | 12 |
| அட்டவணை | 7: | மாகாணங்களுக்கிடையில் மூலதனநிதி (மா.கு.அ.கொமற்றும் பி.அ.கொ) பகிர்ந்தளிக்கப்பட்டசதவீதம் - 2017 | 13 |
| அட்டவணை | 8: | மதிப்பிடப்பட்டமாகாண மூலதனதேவைகள் - 2017 | 14 |
| அட்டவணை | 9: | மாகாணங்களுக்கானமதிப்பிடப்பட்டமொத்தக் கொடை 2017 | 14 |


## பின் இணைப்பு


| | | | |
|---|---|---|---|
| பின் இணைப்புI | : | 2012– 2016 காலப்பகுதியில் பி.அ.கொயின் கீழ் ஒதுக்கியமற்றும்விடுவிக்கப்பட்டதொகைகள் | i |
| பின் இணைப்புII | : | 2012 – 2016 காலப்பகுதிக்கானமா.கு.அ.கொதொடர்பானஒதுக்கம் மற்றும் விடுவிப்புகள் | i |
| பிண் இணைப்புIII | : | மொத்தக் கொடையின்ஒதுக்கம் மற்றும் விடுவிப்பு 2012 – 2016 | ii |
| பிண் இணைப்புIV | : | மூலங்களின் அடிப்படையில் மாகாணஸ்களின் வருமானம் சேகரிப்பு– 2015 | ii |
| பிண் இணைப்புV | : | உள்ளூராட்சிமன்றங்களுக்குமாற்றப்படவுள்ளமுத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றதண்டப்பணம் -2017 | iii |
| பிண் இணைப்புVI | : | நிதிஒதுக்கீட்டு சூத்திரத்திற்குதெரிவுசெய்யப்பட்டமாறிகள–2017 | iii |
| பிண் இணைப்புVII | : | மொ.உ.உயில் மாகாணங்களின் பங்களிப்புசந்தைவிலைகளில், 2006- 2015 | iv |

## நிறைவேற்று சுருக்கம்

நிதி ஆணைக்குழுவானது 1987இல் இலங்கை ஜனநாயக சோ'லிசக் குடியரசின் அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தால் உறுப்புரை 154 ஆர் (4) இன் கீழ் நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை பேணும் நோக்கில் மாகாணங்களின் தேவைக்கு போதுமான நிதியினை ஒதுக்குவதற்கான பரிந்துரையை அரசுக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். இப்பின்னணியில் நிதி ஆணைக்குழுவானது எந்த கொள்கைகள் அடிப்படையில் அரசாங்க நிதியை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டும் மற்றும் மாகாண நிதி தொடர்பாக ஜனாதிபதியால் தொடுக்கப்படும் எந்த விடயம் தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு பரிந்துறைகளை செய்வது கடமையாகும்.

மாகாண சபைகளுக்காக நிதி ஒதுக்கமானது மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

i. பிரமாண அடிப்படைக் கொடை (பி.அ.கொ)
பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான பங்களிப்பினை வழங்கி மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவுகளை ஈடு செய்வதற்காக பி.அ.கொ வழங்கப்படுகின்றது.

ii. மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (மா.கு.அ.கொ)
பிரதானமாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழான உட்கட்டமைப்பு அபிவிருத்தித்திட்டங்களுக்கான மூலதன நிதி இக்கொடையின் கீழ் வழங்கப்படுகின்றது. இதன் கீழ் மாகாணங்களுக்கான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான அபிவிருத்தியின் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான விசேட ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பிரதேச செயலக மட்டத்தில் பின்தங்கிய கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்தும் முகமாக விசேட ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மாகாணத்தின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தில் இடம்பெறாத ஏதாவது அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நெகிழ்வான ஒதுக்கங்களையும் கொண்டுள்ளது.

iii. மொத்த திட்டக் கொடை என்பது மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்கான கொடையாகும். இதன் மூலம் மாகாண சபைகளின் சேவைகள் வழங்கலானது உறுதி செய்யப்படுகின்றது.

மாகாண சபைகளின் பிரதான வருமான மூலங்களானது 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாகாண சபைகளுக்கான வருமானமானது பிரதானமாக இரண்டு கூறுகளைக் கொண்டது. அவையாவன, அரசாங்க வருமானத்தில் இருந்தான மாற்றல்கள் மற்றும் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையின் கீழ் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்தான வருமான உழைப்புக்கள் என்பனவாகும். தேசிய நிறுவனங்களினால் சேகரிக்கப்படும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, முத்திரைத் தீர்வை, மற்றும் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம் என்பன தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு மாற்றப்படும்.

மாகாண சபைகளின் மூலதன தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு நிதி ஆணைக்குழுவானது ஒரு பொறி முறையை வகுத்துள்ளது. அது அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை, மாகாண

சபைகளின் நடுத்தரகால அபிவிருத்தித் திட்டம், மாகாண மட்டத்திலான வளங்களின் உச்ச பயன்பாடு, மாகாணங்களின் உச்ச வருமான இயலளவு, அரச தனியார் கூட்டு முயற்சிகளுக்கான விருப்பம் மற்றும் நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் சுற்று நிருபங்கள்.

மாகாண சபைகளின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது, அனுமதிக்கப்பட்ட பதவியணி, உண்மையாகவுள்ள ஆளணி, பதவி வெற்றிடங்கள், வரிசை அமைச்சுக்களினால் இணைக்கப்பட்ட பதவி அணி, உள்ளூராட்சி மன்றங்களினால் இடமாற்றல்கள், உரிய அரச சுற்றுநிருபங்கள் என்பவற்றின் மீது உரிய கவணம் செலுத்தப்படும்.

2017ஆம் ஆண்டிற்கு நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்ட மாகாண சபைகளின் மூலதனத் தேவைகளானது ரூபா 38,432 மில்லியன்களாகும். அதேவேளை, மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடையிலான மீண்டெழும் செலவுகள் ரூபா 196,904 மில்லியன்களாகும். மொத்த மூலதனத் தேவையானது திருத்தப்பட்ட புள்ளிவிபரவியல் சூத்திரத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பங்கீடு செய்யப்படும். மாகாண மட்டத்தில் மீண்டெழும் செலவினமானது மதிப்பீடு செய்யப்படும் போது, மாகாண சபைகளின் வருமானம் மற்றும் அரசாங்கத்தின் மாற்றப்பட்ட வருமானமானது மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவிலிருந்து கழிக்கப்படும்.

மாகாண சபைகளின் மாகாணங்களின் மேலே கூறப்பட்ட தேவைகளை அடையாளம் காணும்போதும் மற்றும் வருடாந்த திட்டத்தினை அமுல்படுத்தும்போதும் சில முக்கியமான விடயங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. இவ்விடயங்களில் முக்கியமானதாக மாகாண செலவினங்களை நியாயமானதாக்குதல், அரச தனியார் கூட்டு முயற்சி, அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூல அடிப்படையை விரிவாக்குதல், கண்காணிப்பு மற்றும் மீளாய்வு பொறிமுறையை உறுதிப்படுத்தல் மற்றும் மாகாண முகவராண்மைகளின் பரம்பலை குறைத்தல் என்பனவாகும்.

# 1. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோ'லிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தின் 154ஆர்(4) உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழுவானது ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பிரதான கடமைப்பாடானது எந்த கொள்கையின் அடிப்படையில் அரசாங்க நிதியை போதுமான அளவில் மாகாணங்களுக்கிடையில் அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரையை செய்வதாகும். இதற்கு மேலதிகமாக அரசியல் அமைப்பின் உறுப்புரை 54ஆர்(5) இன் படி ஆணைக்குழுவானது நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்ளும் வகையில் கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும்.

அரசியல் அமைப்பின் கீழான ஆணையை கருத்திற் கொண்டு, நிதி ஆணைக்குழுவானது மேற்கூறிய குறிக்கோள அடைந்து கொள்ளும் வகையில் மூலதன நிதியை (மா.கு.அ.கொ மற்றும் பி.அ.கொ) மாகாணங்களுக்கிடையில் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கும். இதற்கு மேலதிகமாக ஆணைக்குழுவானது, மாகாண சபைகளின் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான மீண்டெழும் நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான சிபாரிசினையும் பொதுத்திறைசேரிக்கு வழங்குகின்றது.

நிதி ஆணைக்குழுவானது இதுவரை பின்பற்றிய அனுகுமுறையில் இருந்து விலகி ஜனாதிபதிக்கு சிபாரிசினை வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில், நிதி ஆணைக்குழுவானது 2016ஆம் ஆண்டில், மாகாண சபைகளின் வருடாந்த வரவு செலவுத்திட்ட தயாரிப்பு செய்முறையை முழுமையாக துரிதப்படுத்தும் முகமாக அதன் வருடாந்த வேலைத்திட்டத்தினை மாற்றியமைத்தது. இதனால் மாகாண சபைகளானது தமக்கு அவசியமான நிதியினை வருட ஆரம்பத்திலேயே திறைசேரியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வழிவகுத்துள்ளதோடு பூச்சிய அடிப்படையிலான பாதீட்டு அனுகுமுறையை திறம்பட செயற்படுத்துவதற்கான வசதியையும் செய்து கொடுக்கின்றது.

# 2. நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களும் வகிபாகமும்

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்த சட்டமூலத்தின் உறுப்புரை 154ஆர்(3), (4) மற்றும் (5) பின்வருமாறு கூறுகின்றது.

i. அரசாங்கமானது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீதும் ஆலோசனையோடும் வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களின் தேவைகளை ஈடு செய்வதற்கு போதுமான நிதிகளை பகிர்ந்தளித்தல்.

ii. ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென ஆணைக்குழு எதிர்பார்க்கப்படுகின்றது.

   அ) அரசாங்கத்தினால் மாகாண சபைகளின் தேவைகளுக்காக ஆண்டுதோறும் எந்தக் கொள்கையின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனவும் மற்றும்,
   ஆ) ஜனாதிபதியினால் மாகாண நிதி தொடர்பில் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்
   இ) நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு அவசியமான கொள்கைகளை ஆணைக்குழுவானது பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொண்டு அதாவது ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை, தனிநபர் வருமானம், சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு அவசியமான முற்போக்கான தேவை, ஒவ்வொரு மாகாணத்தினதும் தலாவருமானங்களுக்கு இடையில் காணப்படும் சமத்துவமற்ற தன்மையை குறைப்பதற்கு அவசியமான முன்யோசனைத் தேவை.

அரசியல் அமைப்பின் உறுப்புரை 154ஆர்(7) இன் கீழ் நிதி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு பரிந்துறை செய்யப்பட்ட ஒவ்வொரு விடயத்தினையும் மற்றும் ஒவ்வொரு பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பார். அரசியல் அமைப்பு கட்டளைக்கு அமைவாக, நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகள் தமது அபிவிருத்தி உபாயங்களை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு பின்வரும் வழிகளினூடாக உதவுகின்றது.

- மாகாண சபைகளின் வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளின் தேவைகளை மற்றும் ஆளணித் தேவையினை மதிப்பிடுதல்.
- மாகாணங்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு வசதியளிக்குமுகமாக அவசியமான வழிகாட்டல்களை வெளியிடுதல்.
- மாகாண அபிவிருத்திக்கு அவசியமான நிதி ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தல்.
- அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கும் கொடைகள் தொடர்பாக மாகாண சபைகளுக்கு அறிவித்தல்.
- மாகாண சபைகளின் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், அமுல்படுத்தல் மற்றும் அரசாங்க கொள்கைகள் மற்றும் கொள்கை வேலைச் சட்டகத்தின் அடிப்படையில் நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாக வழிகாட்டல்களை வழங்குவது.
- சிறப்பான முறையில் வளங்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்று சமத்துவமான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு மாகாண சபைகளை ஊக்குவித்தல்.

## 3. மாகாண சபைகளுக்கிடையில் அரச நிதியைப் பகிர்ந்தளித்தல்

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்த சட்டத்தின் உறுப்புரை 154ஆர்(3) இன் படி அரசாங்கமானது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய மற்றும் நிதி ஆணை குழுவுடன் கலந்து ஆலோசித்து தேசிய வரவு செலவு திட்டத்தில் இருந்து நிதியை ஒதுக்குதல் வேண்டும். அந் நிதியானது மாகாண சபைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதியதாக இருத்தல் வேண்டும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

அ) மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட நிதித் தேவைகள் மற்றும் அவ்வாறு முன்வைக்கப்பட்ட நிதித் தேவைகளானது தேசிய கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் முன்னுரிமைகளுடன் ஒத்துக் காணப்படுகின்றதா என ஆய்வு செய்து மாகாண சபைகளின் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்தல்.

ஆ) பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் நோக்கில் நிதியினை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளித்தல்.

### 3.1 மூலதனச் செலவிற்கான மாகாண வகுபடும் நிதித் தொகுதி

மாகாண மட்டத்தில் நிதியீட்டம் செய்வதற்கான பிரதான துறைகளாக கல்வி, சுகாதாரம், வீதிகள், விவசாயம் மற்றும் சமூக சேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிதி ஆணைக்குழுவானது மாகாணங்களுக்கிடையில் ஒரு புள்ளிவிபரவியல் சுட்டியின் அடிப்படையில் நிதியினை பங்கீடு செய்வதற்கான முன்னுரிமை விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கம் மற்றும் பகிர்ந்தளிப்பானது பின்வரும் கொடைகளினூடாக வழங்கப்படுகின்றது.

**பிரமான அடிப்படைக் கொடை (பி.அ.கொ)** பிரதேச வேறுபாடுகளைக் குறைப்பதற்கான பங்களிப்பைச் செய்யும் வகையில் மாகாண மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக மூலதனச் செலவுகளை ஈடுசெய்ய பி.அ.கொ. பயன்படுத்தப்படுகின்றது. இக்கொடையின் கீழ் வழங்கப்படும் நிதியானது மாகாண சபைகளின் விருப்பப்படி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீது பயன்படுத்த முடியும். 2016ஆம் ஆண்டில் இருந்து பி.அ.கொடையில் பின்வரும் இரண்டு வகையில் ஒதுக்கீடு செய்வதற்கு நிதி ஆணைக்குழு தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

i. அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட கருத்திட்ட நடவடிக்கைகள்
 இந்நிதிகளானது மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைகளுக்கு மேலதிகமாக மாகாணத்தில் அபிவிருத்தி கருத்திட்டங்களில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ii. மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் விசேட கருத்திட்டங்கள்
 இந்நிதியினை மாகாண சபை உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்கள்.∴ நடவடிக்கைகளுக்கு உரியதாகும்.

(2012 – 2016) காலப்பகுதியில் பி.அ.கொ யின் கீழ் ஒதுக்கிய மற்றும் விடுவிக்கப்பட்ட தொகையினை **பின் இணைப்பு ை இல் காணலாம்**)

**மாகாணம் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை (மா.கு.அ.கொ):** இதன் கீழ் பிரதானமாக மூலதன செறிவுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்கள் அதாவது அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழுள்ள பல சமூக பொருளாதார துறைகளில் இருந்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

மாகாண சபைகளினால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகளின் அதிகாரகளுடன் கலந்துரையாடி இம்மாகாண திட்டமானது மாகாணத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது இ மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைகளுடன் இணைந்து செல்கின்றது என்ற விரிந்த திட்ட வரைவுக்கு இணங்குவர். ஒவ்வொரு கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் அளவீடு செய்யக் கூடிய பெறுபேறுகள் (வெளியீடு, விளைவு, மற்றும் தாக்கம்) கருத்திற் கொள்ளப்படும். முன் நிர்ணயிக்கப்பட்ட குறிக்காட்டிகள் மூலம் மாகாணங்களின் செயற்பாடுகள் கால இடைவெளியில் மீளாய்வு செய்யப்படும்.

அனைத்து மாகாண அதிகாரிகளும் நிதி ஆணைக்குழுவினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பெறுபேறு அடிப்படையிலான கண்காணிப்பு முறைமைக்கான படிவங்களை பயன்படுத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (மா.கு.அ.கொ தொடர்பான 2012 – 2016 காலப்பகுதிக்கான ஒதுக்கம் மற்றும் விடுவிப்புகள் **பின் இணைப்பு ை இல் காட்டப்பட்டுள்ளது**)

**சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த கருத்திட்டங்கள்** - மாகாணங்களுக்கும் மாகாணங்களுக்கிடையிலும் காணப்படும் சமூக பொருளாதார வேறுபாடுகளை வினைத்திறனான முறையில் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய கருத்திட்டங்களுக்கு மா.கு.அ. கொடையின் கீழ் விசேட நிதி ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். கருத்திட்டங்கள் தாயரிக்கும்போது பெறுமதி சேர்க்கை, தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம், மற்றும் வறுமை குறைப்பு என்பவற்றுக்கு உரிய கவனம் செலுத்தப்படும். இக்கருத்திட்டங்கள் மாகாண அபிவிருத்தியில் குறிப்பிடும்படியான தாக்கம் செலுத்தக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.

**பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்தல்** - மா.கு.அ. கொடையின் கீழ் இப்பகுதிக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்படுவதன் நோக்கமாவது, பின்தங்கிய கிராமங்களின் அடிப்படை

வசதிகளை மேம்படுத்துவதாகும். பல கிராமங்கள் உரிய சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு, சுற்றாடல் ஆபத்துக்கள் மற்றும் சமூக மற்றும் கலாசார காரணிகளால் பின்தள்ளப்பட்டு காணப்படுகின்றன. இவ் அனைத்து காரணிகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்பட்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அடையாளம் காணும்போது ஒருங்கிணைந்த அனுகுமுறையொன்று பின்பற்றப்படுகின்றது. பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட கிராமங்களே இதன் கீழ் உள்வாங்கப்படும்.

கிராமங்கள் தெரிவு செய்யப்படும் போது வருமான மூலங்கள் காணப்படாமை, போதியளவிலான பொதுவசதிகள் காணப்படாமை போன்ற பிரமாணங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். கிராம அபிவிருத்திக்கான கருத்திட்டங்களானது சமூக அடிப்படையிலான நிறுவனங்களின் உதவியுடன் தெரிவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தை அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் பொறுப்பானது மாகாண கிராமிய அபிவிருத்தி அலகு அல்லது திணைக்களத்திற்கு வழங்கப்படும்.

**நெகிழ்ச்சியான ஒதுக்கம்** - இந்த வகையான நிதியானது ஒரு “இடைவெளி நிரப்பலாகும்” மூல திட்டத்தில் உட்படுத்தப்படாத அவசர தேவைகளுக்கானதாகும்.

**மொத்த திட்டக் கொடை** - இந்நிதியானது மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகும். அதாவது சேவை வழங்கல் பொறிமுறையை கொண்டு நடாத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமாகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் ஆளணிக்கான சம்பளங்களும் வேதனங்களும் இம் மீண்டெழும் செலவில் பெரும்பங்கை கொண்டுள்ளது. உண்மையாக சம்பளங்களும் வேதனங்களும் முகாமைத்துவ திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள பதவி ஆளணிகள் வரையறைக்குள் உண்மையில் காணப்படுகின்ற ஆளணியின் அடிப்படையிலே கணிப்பிடப்படுகின்றது. இக்கொடையில் உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான மீள்பெறுவனவு மற்றும் சம்பளங்களும் வேதனங்களுக்குமான மாற்றல்களையும் உள்ளடக்கியதாகும். (2012 – 2016 காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட மொத்தக் கொடைகள் **பின் இணைப்பு ைைை இல் காட்டப்பட்டுள்ளது.**)

## 4. மாகாண வருமானம்

மாகாண சபைகளின் வருமானமானது இரண்டு மூலங்களில் இருந்து உருவாகின்றது.

i. அரச வருமானத்தின் மூலமான மாற்றல்கள்
ii. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்படும் வருமானம்.

### 4.1 அரசாங்க வருமானத்தின் மூலமான மாற்றல்கள்

பொதுத் திறைசேரியின் அரச இறைக் கொள்கைத் திணைக்களத்தினால் 2010 டிசம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01.∵.2010 இலக்க சுற்று நிரூபத்தின் படி தேசிய வருமாண அதிகாரிகளான உள்நாட்டு இறைவரி ஆணையாளர், சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மோட்டார் வாகன பதிவாளர் நாயகம் ஆகியோரினால் சேகரிக்கப்படும் வருமானமானது பின்வரும் அடிப்படையில் மாற்றல் செய்யப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அ) 33⅓ சதவீதம் தேசத்தை கட்டியெழுப்பும் வரி
ஆ) 100 சதவீதம் முத்திரைத் தீர்வை
இ) 70 சதவீதம் மோட்டார் பதிவுக் கட்டணம்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (தே.க.வ) மற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் விகிதாசாரமானது கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாண சபைகளுக்கிடையில் பகிரப்படும் வீதம்**

| **மாகாணம்** | **சதவீதம் (%)** |
|---|---|
| மேல் | 48 |
| மத்தி | 09 |
| தென் | 09 |
| வடமேல் | 09 |
| சப்ரகமுவ | 05 |
| வட மத்தி | 05 |
| ஊவா | 05 |
| கிழக்கு | 05 |
| வடக்கு | 05 |
| **மொத்தம்** | **100** |

*குறிப்பு: இவ்விகிதாசாரமானது திறைசேரியினால் நிதி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து காலத்திற்கு காலம் மாற்றப்படும்.*

**அட்டவணை 2: அரசாங்க வருமான மாற்றல்கள்**

| **ீசழளைெஉந** | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | **இலக்கு** | **மாற்றல்கள்** | **%** | **இலக்கு** | **மாற்றல்கள் (2016 ஜுன் வரை)** | **%** |
| மேல் | 18,960 | 15,785 | 83% | 17,568 | 9,904 | 56% |
| மத்தி | 3,555 | 2,997 | 84% | 3,294 | 1,845 | 56% |
| தென் | 3,555 | 2,883 | 81% | 3,294 | 1,814 | 55% |
| வடக்கு | 1,975 | 1,592 | 81% | 1,830 | 1,007 | 55% |
| வடமேல் | 3,555 | 3,035 | 85% | 3,294 | 1,881 | 57% |
| வட மத்தி | 1,975 | 1,618 | 82% | 1,830 | 1,048 | 57% |
| ஊவா | 1,975 | 1,645 | 83% | 1,830 | 1,042 | 57% |
| சப்ரகமுவ | 1,975 | 1,314 | 67% | 1,830 | 829 | 45% |
| கிழக்கு | 1,975 | 1,643 | 83% | 1,830 | 1,041 | 57% |
| **மொத்தம்** | **39,500** | **32,513** | | **36,600** | **20,411** | |

*மூலம்: மாகாண சபைகள்*

2015ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் மாகாணங்களுக்கு வருமான மாற்றல்களின் பங்கானது இலக்கினைவிட குறைவானதாகும். (அட்டவணை 2) இது திறைசேரி கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

## 4.2 அதிகாரம் பகிர்வளிக்கப்பட்ட வழிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம்

அரசியல் சாசனத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது உறுப்புரையில் 36.01 இல் இருந்து 36.20 வரையான பகுதியில் காட்டப்பட்டுள்ள மாகாண சபைகளின் வருமானமானது வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் மூலம் சேகரிக்கப்படுகின்றது. மாகாண சபைகளின் பிரதான வருமான மூலங்களான மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம், கலால் வரி, முத்திரைக் கட்டணம், மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் என்பனவாகும். மாகாண சபைகளினால் சேகரிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுகின்றன. (2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் பிரதான வருமாண மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் **பின் இணைப்பு ஊ இல் காட்டப்பட்டுள்ளது.**)

கீழே அட்டவணை மூன்றில் 2016 ஆம் ஆண்டு ஜூன் வரையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது காட்டப்பட்டுள்ளது. முத்திரை தீர்வைகளானது அதி உயர்பட்ச வருமாண மூலமாக தொடர்ந்தும் காணப்படுவதோடு மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் அடுத்தபடியாக காணப்படுகின்றது.

**அட்டவணை 3: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் - 2016* (ஜூன் வரை)**

| மாகாணம் | இலக்கு முத்திரைத் தீர்வை நீதிமன்றத் தண்டப்பணம் உள்ளடங்களாக 2016 | அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த விற்பணை புரள்வு* | மோட்டார் வாகானப் பதிவுக் கட்டணம் | கலால் வரி | ஏனையவை** | முத்திரைத் தீர்வை | நீதிமன்றத் தண்டப் பணங்கள் | |
| மேல் | 18,000,000 | 11,470 | 1,770,400 | 335,140 | 826,580 | 7,460,550 | 325,190 | 10,729,330 |
| மத்தி | 2,750,000 | 3,100 | 389,290 | 162,066 | 197,448 | 863,639 | 39,482 | 1,655,024 |
| தென் | 2,839,700 | 919 | 500,223 | 93,858 | 157,007 | 789,962 | 91,397 | 1,633,366 |
| வடக்கு | 410,300 | - | 116,318 | 37,413 | 90,111 | 121,741 | 41,326 | 406,909 |
| வடமேல் | 3,070,000 | 2,047 | 560,994 | 63,441 | 184,937 | 832,000 | 138,345 | 1,781,763 |
| வட மத்தி | 1,145,000 | 597 | 249,566 | 40,053 | 189,508 | 66,930 | 95,856 | 642,510 |
| ஊவா | 855,000 | 732 | 177,194 | 35,665 | 160,147 | 151,838 | 54,977 | 580,553 |
| சப்ரகமுவ | 1,390,000 | - | 245,141 | 37,477 | 148,529 | 396 | 71,092 | 502,635 |
| கிழக்கு | 940,000 | - | 190,917 | 65,629 | 115,143 | 208,550 | 40,698 | 620,937 |
| **மொத்தம்** | **31,400,000** | **18,865** | **4,200,042** | **870,741** | **2,069,410** | **10,495,607** | **898,362** | **18,553,028** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த வருமாண அறிக்கை – 2016*

* *2010 வரை சேகரிக்கபட வேண்டிய மொத்த விற்பணை புரள்வு*

** *ஏனையவை வாடகை, வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதனச் சொத்துக்களின் விற்பணை வருமாணம், பந்தய வரி உள்ளடங்களாக.*

## 4.3 2017 ஆம் ஆண்டிற்கான வருமாண எதிர்வுகூறல்

மாகாண சபைகளின் வருமாண இலக்கானது அரசாங்க வருமானங்களிலான மாற்றல்கள் மற்றும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்தான வருமான இலக்குகளின் அடிப்படையில் திட்டமிடப்படுகின்றது. இவ்விரு வருமான மூலங்களிலான வருமான இலக்குகளில் இருந்து மாகாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவுகளானது கழிக்கப்படும்.

நிதி ஆணைக்குழுவானது வருமான இலக்குகளை திட்டமிடும்போது பொதுத் திறைசேரி மற்றும் மாகாண அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கின்றது.

### 4.3.1 அரசாங்க வருமானங்களில் இருந்தான மாற்றல்கள்

மாகாண சபைகளுக்கு வருடாந்தம் மாற்றப்பட வேண்டிய தொகையானது பொதுத் திறைசேரியினால் அரச இறைக்கொள்கை சுற்று நிரூபம் இல 01.∴2010 2010.12.29 ஆம் திகதிய சுற்று நிரூபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. 2017ஆம் ஆண்டின் போது மாகாணங்களுக்கு மாற்றப்படவுள்ள அரசாங்க வருமானமானது அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளது. இது அரச இறைக்கொள்கை திணைக்களத்தின் மதிப்பீடுகளின் அடிப்படையிலாகும்.

**அட்டவணை 4: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்க வருமானத்தில் இருந்தான மாற்றல்கள் - 2017**

| மாகாணம் | முன் எதிர்வு கூறப்பட்ட வருமானத்தில் மாகாணங்களின் பங்கு % | மாற்றல்கள் |
|---|---|---|
| மேல் | 48 | 22,080,000 |
| மத்தி | 9 | 4,140,000 |
| தென் | 9 | 4,140,000 |
| வடக்கு | 5 | 2,300,000 |
| வடமேல் | 9 | 4,140,000 |
| வட மத்தி | 5 | 2,300,000 |
| ஊவா | 5 | 2,300,000 |
| சப்ரகமுவ | 5 | 2,300,000 |
| கிழக்கு | 5 | 2,300,000 |
| **மொத்தம்** | **100** | **46,000,000** |

*மூலம்: பொதுத் திறைசேரி – அரச இறைக்கொள்கை திணைக்களம்*

### 4.3.2 அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான வருமான இலக்குகள்

2017ஆம் ஆண்டிற்கான முன்னெதிர்வு கூறப்பட்ட வருமானமானது முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் உள்ளடங்களாக ரூபா 39,322 மில்லியன்களாகும். முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக முன் எதிர்வு கூறப்பட்ட வருமாணம் ரூபா 16,319 மில்லியன்களாகும். இது அட்டவணை 5இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான எதிர்வு கூறப்பட்ட வருமானம் - 2017**

| மாகாணம் | எதிர் பார்க்கப்படும் வருமாணம்: முத்திரை தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக | | | எதிர் பார்க்கப்படும் வருமாணம்: முத்திரை தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக | | |
|---|---|---|---|---|---|---|
| | மாகாண எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழு வின் எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழு வின் எதிர்வு கூறலில் மாகாணங்களி ன் பங்கு % | மாகாண எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழுவி ன் எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழு வின் எதிர்வு கூறலில் மாகாணங்களி ன் பங்கு % |
| மேல் | 6,444,320 | 7,500,000 | 46 | 19,782,320 | 22,800,000 | 58 |
| மத்தி | 1,615,000 | 1,629,000 | 10 | 2,965,000 | 3,314,000 | 8 |
| தென் | 1,305,000 | 1,500,000 | 9 | 2,838,000 | 3,175,000 | 8 |
| வடக்கு | 484,000 | 545,000 | 3 | 1,002,000 | 1,068,000 | 3 |
| வடமேல் | 1,685,500 | 1,698,500 | 10 | 3,535,500 | 3,648,500 | 9 |
| வட மத்தி | 932,550 | 936,000 | 6 | 1,242,550 | 1,251,000 | 3 |
| ஊவா | 669,350 | 760,000 | 5 | 849,350 | 1,140,000 | 3 |
| சப்ரகமுவ | 1,045,900 | 1,050,000 | 6 | 1,687,900 | 1,750,000 | 4 |
| கிழக்கு | 569,000 | 700,000 | 4 | 950,000 | 1,175,000 | 3 |
| **மொத்தம்** | **14,750,620** | **16,318,500** | **100** | **34,852,620** | **39,321,500** | **100** |

*மூலம்: மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் நிதி ஆணைக்குழு.*

2017ஆம் ஆண்டில் முத்திரைத் தீர்வை மற்றும் நீதி மன்ற தண்டப்பணங்களில் இருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டிய எதிர்வு கூறப்பட்ட தொகை ரூபா 23,003 மில்லியன்களாகும். மாகாண சபைகளின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்ட வருமானங்களின் தொகை **பின் இணைப்பு எ இல் தரப்பட்டுள்ளது**

## 5. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல்.

மாகாண சபைகளின் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்வதற்காக நிதி ஆணைக்குழு வரவு செலவுத்திட்ட வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரமாணங்களையும் உள்ளடக்கி ஒரு முழுமையான மதிப்பீட்டு செய்முறையை மேற்கொள்கின்றது

### 5.1 மூலதன தேவைகளை மதிப்பீடு செய்தல்

மாகாண சபைகளின் 2017ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான நிதித் தேவைகள் மதிப்பீடு செய்வது தொடர்பான வழிகாட்டல்களை நிதி ஆணைக்குழு 2016 மார்ச் மாதத்தில் வெளியிட்டது. இம்மதிப்பீட்டுச் செய்முறையை உறுதி செய்யும் நோக்கில் மாகாண சபைகளின் மூலதனச் செலவுத் தேவைகளை மதிப்பீடு செய்யும் செயன்முறியைப பயன்படுத்துவதற்காக நிதி ஆணைக்குழுவானது ஒரு சரிபார்ப்பு பட்டியலை தயாரித்துள்ளது. வருடாந்த மூலதன செலவுத் தேவையை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் விடயங்களில் உரிய கவணம் செலுத்தப்படும்.

- அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை.
- அரசாங்கத்தினால் உப தேசிய மட்டத்தில் அமுல்படுத்தும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கம்.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்.
- மாகாணங்களில் உரிய மனித மற்றும் பௌதீக வளங்களின் உச்ச பயன்பாடு.
- வர்த்தக ரீதியாக சாத்தியமான கருத்திட்டங்கள் மீது அரச தனியார் பங்குடமை அனுகுமுறையை பின்பற்றுதல்.
- அபிவிருத்தியில் காணப்படும் மாகாணத்திற்கு எ்ளான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான வேறுபாடுகளை குறைத்தல்.
- கருத்திட்ட சாத்தியத்தன்மை மற்றும் அமுல்படுத்தலுக்கான தயார்நிலை.
- நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள்.

மூலதன தேவைகளை மதிப்பீடு செய்வதற்காக நிதி ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய அனுகுமுறையானது முன்னைய அனுகுமுறையினைப் போல் அல்லாது மிகவும் பயனுள்ளதாகவும் நியாயமான முறையில் மாகாண மூலதன தேவைகளை தீர்மானிக்க கூடியதாகவுள்ளது. மாகாண சபைகளிடமிருந்து 2017ஆம் ஆண்டிற்கான மூலதன தேவைகளுக்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன் நிதி ஆணைக்குழுவானது ஒவ்வொரு மாகாண சபைகளினதும் நடுத்தர கால அபிவிருத்தி வேலைத்திட்டம் கடந்த வருட செயலாற்றுகை மாகாண சபைகளின் இயலளவு, அடையாளம் காணப்பட்டுள்ள முன்னுரிமை கருத்திட்டங்கள் மற்றும் 2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அழைப்பு போன்றவற்றுடன் தொடர்புபடுத்தி ஒவ்வொரு மாகாணத்தினதும் கோரிக்கையானது தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டு ஆணைக்குழுவினால் மாகாண சபைகளின் 2017ஆம் ஆண்டிற்கான மூலதன தேவைகளானது பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

### 5.2 மீண்டெழும் செலவுகளை மதிப்பீடு செய்தல்.

மாகாண சபைகளின் அபிவிருத்தி செயன்முறைக்கு வசதியளிக்கும் முகமாக நிதி ஆணைக்குழுவானது தேவையான மீண்டெழும் செலவுக்கான ஒதுக்கங்களை மீண்டெழும் வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மொத்தக் கொடையாக ஒதுக்குகின்றது.

மீண்டெழும் செலவானது பிரதானமாக தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகளை கொண்டதாகும். தனிப்பட்ட ஊதியங்களாவன, சம்பளங்கள், மற்றும் வேதனம், மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாள் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை உள்ளடக்கியதாகும. ஏனைய மீண்டெழும் செலவுகளானது பிரதானமாக பிரயாணச் செலவுகள், பொருட்கள், பராமரிப்பு, ஒப்பந்த சேவைகள், ஏனைய நிறுவனங்களுக்கான மாற்றல்கள், கொடைகள், மானியங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட ஊதியங்களை கணிப்பிடும் போது மாகாண சபைகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவி ஆளணி, தற்போதுள்ள ஆளணி, வெற்றிடங்கள், வரிசை அமைச்சுக்களினால் இணைப்புச் செய்யப்பட்ட ஆளணி, உள்ளூராட்சி மன்றங்களுக்கான இடமாற்றம் மற்றும் உரிய அரசாங்க சுற்று நிருபங்கள் என்பவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்படும். ஏனைய மீண்டெழும் செலவினங்களை மதிப்பீடு செய்யும்போது சேவைகள் மற்றும் ஆளணியின் விரிவாக்கம், சம்பள சீராக்கம், விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் உரிய சுற்று நிருபங்கள் என்பவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்படும்.

## 5.3 2017 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகள்

நிதி ஆணைக்குழுவினால் 2017ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் தொடர்பாக மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கு 21.03.2016இல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் அளிக்கும் வகையில் மாகாண சபைகளின் கோரிக்கைகளாவன நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான விரிவான விடயங்கள் கீழ்வரும் அட்டவணை 6இல் தரப்பட்டுள்ளன

**அட்டவணை 6: மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கான மாகாண சபைகளின் கோரிக்கைகள் - 2017**

*(ரூபா மில்.)*

| மாகாணம் | மூலதனம் | மீண்டெழும் * | மொத்தம் |
|---|---|---|---|
| மேல் | 7,076 | 43,553 | 50,629 |
| மத்தி | 17,753 | 33,604 | 51,357 |
| தென் | 11,088 | 29,066 | 40,154 |
| வடக்கு | 10,672 | 23,198 | 33,870 |
| வடமேல் | 8,606 | 30,167 | 38,773 |
| வட மத்தி | 10,381 | 20,088 | 30,469 |
| ஊவா | 3,420 | 21,247 | 24,667 |
| சப்ரகமுவ | 6,007 | 25,341 | 31,348 |
| கிழக்கு | 10,240 | 23,037 | 33,277 |
| **மொத்தம்** | **85,243** | **249,301** | **334,544** |

*மூலம்: மாகாண சபைகளின் கோரிக்கைகள் - 2017*

*குறிப்பு: * அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மாற்றல்கள் கழிக்கப்பட்டதன் பின்பு கணிப்பீடு செய்யப்பட்ட தொகையாகும்.*

மாகாண சபைகளினால் கோரப்பட்டுள்ள மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளானது முறையே ரூபா 85,243 மில்லியன் மற்றும் ரூபா 249,301 மில்லியன்களாகும். ஆகவே மொத்தக் கோரிக்கை ரூபா 334,544 மில்லியன்களாகும்.

## 5.4 மாகாண சபைகளுக்கு மூலதன மற்றும் மீண்டெழும் நிதியினைப் பகிர்ந்தளித்தல்.

மாகாண சபைகளுக்கிடையில் நிதியினைப் பகிர்ந்தளிப்பது என்பது ஒரு எளிதான காரியமல்ல. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளின் அடிப்படையில் நிதி ஆணைக்குழுவானது திறைசேரியில் பல தொடர் கலந்துரையாடல்களின் பின்பு மாகாண சபைகளுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட வேண்டிய தொகை தொடர்பாக ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு வரும். மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டக்கூடிய தொகையானது அக்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2017ஆம் ஆண்டில் இருந்து மாகாண சபைகளுக்கிடையில் மூலதன நிதியினை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதற்காக நிதி ஆணைக்குழுவானது மேம்படுத்தப்பட்ட புள்ளிவிபரவியல் சுட்டி ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க சூத்திரத்தை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உதவிகளை தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் வழங்கியுள்ளது.

மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடைகளின் கீழ் மாகாணங்களுக்கான மூலதன நிதியினை பகிர்ந்தளிப்பதற்கு பல்வகை புள்ளிவிபரவியல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட “கொள்கை கூறு ஆய்வு”

(ீசைெஉனியட ஊழஅிழநெவெ யுயெடலளளை) என்ற முறை பயன்படுத்தப்படவுள்ளது. இச்சூத்திரத்தை தயாரிப்பதற்கு பின்வரும் சமூக பொருளாதார பிரமாணங்கள் மற்றும் மாறிகள் கவணத்திற் கொள்ளப்படும்.

- சனத்தொகை
- மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி
- தலைக்குரிய வருமான குறிக்காட்டி
- சராசரி தலா வருமானம்
- ஒரு மருத்துவ அதிகாரிக்கான ஆட்கள்
- விஞ்ஞான துறையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை.

மேற்கூறப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் 2017ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கிடையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடைகளை பகிர்ந்தளிப்பதற்கு பின்வரும் மாகாண அடிப்படையிலான விகிதாசாரம் பயன்படுத்தப்பட்டன. (அட்டவணை 7).

**அட்டவணை 7: மாகாணங்களுக்கிடையில் மூலதன நிதி (மா.கு.அ.கொ மற்றும் பி.அ.கொ) பகிர்ந்தளிக்கப்பட்ட சதவீதம் - 2017**

| மாகாணம் | குறியீடு | ஒதுக்கீடு % |
|---|---|---|
| மேல் | 0.58631 | 6.36 |
| மத்தி | 0.89621 | 9.72 |
| தென் | 0.89543 | 9.71 |
| வடக்கு | 1.27113 | 13.78 |
| வடமேல் | 0.94187 | 10.21 |
| வட மத்தி | 1.10997 | 12.04 |
| ஊவா | 1.29017 | 13.99 |
| சப்ரகமுவ | 1.0471 | 11.35 |
| கிழக்கு | 1.18388 | 12.84 |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

நிதி ஒதுக்கீட்டு சூத்திரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாறிகள் **பின் இணைப்பு எை இல் தரப்பட்டுள்ளது**

மாகாண சபைகளினால் கோரப்பட்ட மூலதன தேவைகள் நிதி ஆணைக்குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்பு கீழே அட்டவணை 8இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சராசரிகளைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கான மூலதன தேவைகள் நியாயமான மற்றும் பகுத்தறிவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

2017ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்டுள்ள மாகாண மூலதன தேவைகள் வெவ்வேறாக கீழே தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 8: மதிப்பிடப்பட்ட மாகாண மூலதன தேவைகள் - 2017

*(ரூபா மில்.)*

| மாகாணம் | மதிப்பிடப்பட்ட தேவைகள் – 2017 | |
|---|---|---|
| | மா.கு.அ.கொ | பி.அ.கொ |
| மேல் | 2,126.28 | 318.00 |
| மத்தி | 3,249.59 | 486.00 |
| தென் | 3,246.25 | 485.50 |
| வடக்கு | 4,606.93 | 689.00 |
| வடமேல் | 3,413.41 | 510.50 |
| வட மத்தி | 4,025.21 | 602.00 |
| ஊவா | 4,677.14 | 699.50 |
| சப்ரகமுவ | 3,794.53 | 567.50 |
| கிழக்கு | 4,292.67 | 642.00 |
| **மொத்தம்** | **33,432.00** | **5000.00** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்ட மாகாண மீண்டெழும் செலவுகள் கீழே அட்டவணை 9இல் காட்டப்பட்டுள்ளன. மொத்தக் கொடையை மதிப்பீடு செய்யும் போது மாகாணங்களின் மதிப்பிடப்பட்ட வருமானங்களானது மாகாணங்களின் மீண்டெழும் செலவுகளில் இருந்து கழிக்கப்படும்.

## அட்டவணை 9: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடை 2017

*(ரூபா.'000)*

| மாகாணம் | மொத்த மீண்டெழும் செலவு | வருமான இலக்குகள், முத்திரை தீர்வை, நீதிமன்றத் தண்டப்பணம் நீங்கலாக. | மாகாணங்களுக்கான அரச வருமாணங்களில் இருந்தான மதிப்பிடப்பட்ட மாற்றல்கள் | மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடை |
|---|---|---|---|---|
| மேல் | 49,000,167 | 7,500,000 | 22,080,000 | 19,420,167 |
| மத்தி | 33,020,053 | 1,629,000 | 4,140,000 | 27,251,053 |
| தென் | 30,026,668 | 1,500,000 | 4,140,000 | 24,386,668 |
| வடக்கு | 22,439,232 | 545,000 | 2,300,000 | 19,594,232 |
| வடமேல் | 32,494,204 | 1,698,500 | 4,140,000 | 26,655,704 |
| வட மத்தி | 20,517,475 | 936,000 | 2,300,000 | 17,281,475 |
| ஊவா | 21,764,448 | 760,000 | 2,300,000 | 18,704,448 |
| சப்ரகமுவ | 25,901,712 | 1,050,000 | 2,300,000 | 22,551,712 |
| கிழக்கு | 24,059,421 | 700,000 | 2,300,000 | 21,059,421 |
| **மொத்தம்** | **259,223,380** | **16,318,500** | **46,000,000** | **196,904,880** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

## 6. எதிர்நோக்கும் சவால்கள்

2016ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவினால் மேம்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டு சூத்திரம் பயன்படுத்தப்பட்டாலும் அதனை மேலும் மேம்படுத்துவதற்கு மற்றும் மெருகூட்டுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என்ற கருத்தைக் நிதி ஆணைக்குழு கொண்டுள்ளது. இதனால் 2017ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடானது யதார்த்தமானதாக எதிர்காலத்தை கருத்திற் கொண்டதாக மற்றும் மாகாணத்தின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்புடையதாகவும் காணப்படலாம். தற்போது மாகாண மற்றும் மாவட்டம் தொடர்பான தகவல்களில் குறைபாடுகள் மற்றும் இடைவெளிகள் காணப்படுகின்றன. சிறப்பான தேவை மதிப்பீட்டு முறைமை மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றினை உருவாக்குவதன் மூலம் நிதி தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் சிக்கலை நடைமுறைக்கு ஏற்றவாறு தீர்த்து வைக்கலாம். நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகளிடமிருந்து உண்மையான செலவுகள், பெறுவனவுகள், வருமாண சாத்தியத்தன்மைகள் தொடர்பான பல தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்காக மாகாண சபைகளுடன் இணைந்து வேலை செய்கின்றது. நாட்டில் பல துறைகளிலும் குறிப்பிடும்படியான அபிவிருத்தி இடம்பெற்று வருவதனால் வரி சேகரிப்பு, பின்தங்கியுள்ள மட்டம், மற்றும் மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கத்திற்கு போதுமான தகவல்கள் தொடர்பான திறனளவுகளை நிர்ணயிப்பதற்கான தகவல்களைக் கண்டறிவதற்கு முழுமையான ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. சமீபத்தில் நிதி ஆணைக்குழுவானது மாகாண அதிகாரிகளுக்கு மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்டத்தை பூச்சிய அடிப்படையிலான வரவு செலவு அனுகுமுறையில் தயாரிப்பதற்கு தயார்படுத்தும் வகையில் பயிற்சி, அமர்வு, செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தி வழிநடாத்தியுள்ளது.

### 6.1 உள்ளக வருமான உருவாக்கம்.

அண்மைய மிக காலங்களில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமது சாத்தியமான வருமானத்தை உருவாக்கிக் கொள்வதற்கான ஆளுமையை அபிவிருத்தி செய்து கொள்வதற்கோ அல்லது ஊக்குவிப்பதற்கான முறையான அனுகுமுறையொன்று காணப்படவில்லை. இதனால் மாகாண சபைகளிடத்தில் ஒரு தங்கி வாழும் பழக்கத்தை உருவாக்கியுள்ளது. ஆகவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினது அரச கொடைகளில் தங்கியிருக்கும் தன்மையில் இருந்து விடுபட்டு முடியுமான அளவில் உச்ச அளவிலான சாத்தியமான வருமானத்தை உருவாக்குவதற்கு முயற்சித்தல் வேண்டும். மாகாண சபைகளின் வருமான உருவாக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக நிதி ஆணைக்குழுவானது மீண்டும் ஒத்திசைவான கொடையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது

### 6.2 அழுத்தத்திற்கு உட்படுத்துதல்

அரச திறைசேரியானது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினதும் மேலதிகமான மற்றும் பூர்த்தி செய்ய முடியாத கோரிக்கைகளினால் தொடர்ச்சியாக பல வருடங்களாக அலுத்தத்திற்கு உட்பட்டுள்ளது. பதின்மூன்றாவது திருத்த சட்ட மூலத்தின் கீழ் மாகாண சபைகளின் அதிகாரத்தின் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்கமே அமுல்படுத்தும் ஒரு தலைப்பட்சமான கொள்கையானது இதன் உச்சபட்சமான நிலையைக் காட்டுகின்றது.

### 6.3 ஒரே வேலையை அரசும் மாகாண சபைகளும் செய்வதைத் தவிர்த்தல்

மத்திய அரசாங்கத்தினால் சில நடவடிக்கைகளுக்காக உரிய மாகாண சபைகளுடன் கலந்தாலோசிக்காமல் வளங்களை ஒதுக்குவதனால் இது இடம்பெறுவதை நாம் காணக்கூடியதாக

உள்ளது. ஆகவே, இவ்வாறான வேலைகளின் இரட்டைத் தன்மையினை தவிர்ப்பதற்கும் சிறந்த நிதி ஒழுக்கத்தினைப் பேணுவதற்கும் உரிய ஒருங்கிணைப்பு அவசியமாகின்றது.

### 6.4 வருடாந்த வேலைத்திட்டத்தை அடிக்கடி மாற்றம் செய்தல்

அனைத்து மாகாணங்களும் தாம் சமர்ப்பித்துள்ள வருடாந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிதி ஆண்டு முழுவதும் அடிக்கடி மாற்றியமைப்பதை நடைமுறையாகக் கொண்டிருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. இது தெளிவுபடுத்துவது என்னவென்றால் மாகாண சபைகள் தமது வருடாந்த வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு முறையான மதிப்பீட்டை செய்வதில்லை என்பதாகும். சில வேலைகளில் அரசியல் காரணங்களும் இம்மாற்றங்களுக்கு காரணமாகின்றன. மாகாண சபைகள் பூச்சிய அடிப்படையிலான பாதீட்டு அனுகுமுறையின் கீழ் வருட ஆரம்பத்திலிருந்தே கருத்திட்டங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்ய வேண்டிய கடப்பாடு காணப்படுவதனால் இவ்வாறான நடைமுறையினை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### 6.5 பொறுப்புக் கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியின் தேவைகளை மேம்படுத்தல்.

வரையறுத்த வளங்களை பொருளாதார ரீதியாக வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும் பயன்படுத்தி உச்ச பயன்பாட்டை அடைந்து கொள்ளும் வகையில் நல்லாட்சியும் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்த வேண்டியதன் தேவையை நிதி ஆணைக்குழுவானது அடையாளம் கண்டுள்ளது.

நிதியினை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில் நிதிப் பாவனையில் ஒழுக்கத்தினை அறிமுகம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். நிதி ஆணைக்குழுவானது ஏற்கனவே மாகாண மட்டத்தில் சொத்து முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சி மற்றும் வகைகூறும் தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## 7. முடிவுரை

ஒருமித்த கருத்தைக் கொண்ட தேசிய அரசாங்கத்தின் தொலை நோக்கானது இலங்கை பொருளாதாரத்தை 2020 இல் உயர் நடுத்தர வருமான அந்தஸ்த்தை உடைய நாடு என்ற வகையில் அடையச் செய்வதாகும். இத்தூர நோக்கினை அடைந்து கொள்வதற்காக அரசாங்கமானது ‘‘சமூக போட்டித்தன்மை கொண்ட சந்தை’’ பொருளாதார உபாயமொன்றை பின்பற்றுகின்றது. இதன் கீழ் சமூக சமத்துவத்தை பேணும் வகையில் பயனுள்ள முறையான வளப் பாவனையுடன் போட்டித் தன்மையான பொருளாதார நலன்கள் இணைக்கப்படும். இம் முழு அனுகுமுறையும் பிரதான ஐந்து இலக்குகளைக் கொண்டிருக்கும். அவையாவனஇ

- ஒரு மில்லியன் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல்.
- கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- மத்திய வருமான வர்க்கத்தை பலப்படுத்தல்.
- கிராமப்புறங்களில் காணி உரிமையை உறுதிப்படுத்தல்.

நாட்டில் சமாந்தரமான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்வது அரசின் கொள்கை இலக்குகளில் ஒன்றாகும். இதன் பொருட்டு அரசாங்கமானது பல பிராந்திய அபிவிருத்தி முன்னெடுப்புக்களை அடையாளம் கண்டுள்ளது. இதன் மூலம் அரசாங்கமானது பிராந்திய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. மெகா பொலிஸ் அபிவிருத்தி, விசேட பொருளாதார வலயம், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அவற்றில் சில முக்கியமானவையாகும். இதேவேளை கல்வி, மற்றும் சுகாதாரத் துறைக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு 2016ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கான மூலதன ஒதுக்கங்களை இரு மடங்காக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

"நாட்டில் சமாந்தரமான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதே" நிதி ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடாக இருந்த போதும் இவ் இலக்கை அடைந்து கொள்வதில் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாத நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு பிரதான காரணம் மாகாண சபைகளுக்கு ஒதுக்குகின்ற மூலதன நிதியானது நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட பாதீட்டில் 10 சதவீதமேயாகும். எவ்வாறாயினும் கிடைக்கப் பெற்ற நிதியானது வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட்டாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீதமான மாகாணங்களின் பங்களிப்பானது தேசிய மட்டத்தில் பின்தங்கிய மாகாணங்களுக்கு சார்பாக, குறிப்பாக வட மாகாணம், வடமத்திய மாகாணம் மாற்றமடைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். கடந்த 15 வருட காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியில் மேல் மாகாணத்தின் பங்களிப்பானது 49 சத வீதத்தில் இருந்து 41 சத வீதமாகக் குறைந்திருப்பதோடு சில பின்தங்கிய மாகாணங்கள் தமது பங்களிப்புக்களை 2 சத வீதம் தொடக்கம் 4 சத வீதத்திற்கு இடைப்பட்ட எல்லைக்குள் அதிகரித்துக் கொண்டுள்ளன. **(பின் இணைப்பு எனை)**

சமூக பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் வேறுபாடுகளை கருத்திற் கொள்ளும் போது அனைத்து மாகாணங்களும் ஒரு சிறிய அளவிலான முன்னேற்றத்தைக் காட்டினாலும் சில தனிமைப்படுத்தப்பட்ட புவியியல் தொகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம், ஏனைய சமூக பொருளாதார குறிக்காட்டிகளான தலைக்கான வறுமைச் சுட்டி, உணவு அல்லா பண்டங்கள் மீதான செலவு கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளில் சித்தியடையும் வீதம், குறைந்த நிறையுடன் கூடிய பிறப்பு, பாதுகாப்பான குடிநீர் கிடைப்பனவு, மற்றும் மேம்படுத்தப்பட்ட வீதி லையமைப்பு போன்றவற்றில் அனைத்து மாகாணங்களும் கிட்டிய அண்மைக் காலத்தில் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. மாகாணங்களுக்குள்ளும் மற்றும் மாகாணங்களுக்கிடையிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் அனைத்து மாகாணங்களும் சுபீட்சக் குறிகாட்டி மற்றும் மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில் ஒரு நேர்க்கணிய பெறுபேற்றை காட்டி நிற்கின்றன.

அரசாங்கத்தின் சமூக பொருளாதார கொள்கையானது நிலைபேறான வளர்ச்சி, நியாயமான வருமான பங்கீடு, நடுத்தர வருமான அந்தஸ்த்தை அடைதல் மற்றும் மக்களின் நலன்கள் மற்றும் சுபீட்சத்தை பேணுதல் போன்றன ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் தூர நோக்கினை அடைந்து கொள்வதற்கு மாகாணங்கள் தமது பொருளாதாரத்தை தேசிய பொருளாதாரத்தின் அடைவு மட்டத்தில் பேணுவதற்கு முக்கிய பங்காற்றல் வேண்டும் என்பதாகும். இச் செயற்பாட்டின் போது மாகாண அதிகாரிகள் தமது அபிவிருத்தி உபாயங்களை வடிவமைக்கும் போது புதுமையான தீர்வுகளை முன்வைப்பதோடு தனியார்த்துறையினை மாகாண அபிவிருத்தியின் பங்காளராக சேர்த்துக் கொள்ளல் வேண்டும். தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கான வசதியளிப்பவர்களாக மாகாண சபைகள் செயற்படல் வேண்டும். இந்த சூழ்நிலையில் ஏனைய விடயங்களுக்கு மத்தியில் மாகாண சபைகளானது குறிப்பாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புக்கள் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு

வசதிகளை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் அரச தனியார் பங்குடமை அடிப்படையிலான முதலீடுகளை ஊக்குவித்தல் வேண்டும்.

## 8. மாகாண சபைகளின் சிறந்த செயலாற்றுகைக்கான பரிந்துரை

1987ஆம் ஆண்டு மாகாண சபைகளின் உருவாக்கத்துடன் அறிமுகமான அதிகார பரவலாக்கமானது அரச செயற்பாடுகளில் மற்றும் தீர்மானம் எடுக்கும் செய்முறையை பிராந்திய மட்டங்களுக்கு பரவலாக்கி அபிவிருத்தியில் காணப்பட்ட பிராந்திய வேறுபாடுகளை குறைக்க உதவியுள்ளது. மாகாண சபைகளின் செலவு கட்டமைப்பை நோக்கும்போது மாகாண பாதீட்டில் 80 சத வீதம் மீண்டெழும் செலவாகக் காணப்படுவதோடு மிகுதியுள்ளதே மூலதனத் தேவைகளுக்கானதாக காணப்படுகின்றது. ஆனால் தேசிய மட்டத்தில் இது 75:25 என்ற விகிதத்தில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இம் மீண்டெழும் செலவுகளில் பெரும்பகுதியானது கல்வி மற்றும் சுகாதார சேவைகளின் செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கே செலவிடப்படுகின்றது. ஆயினும் சுகாதாரத் துறையின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளானது மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இது கட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மாகாண சபைகளின் மூலதனச் செலவுகளானது நாட்டின் மொத்த மூலதனச் செலவுகளில் அதாவது பாதுகாப்பு மற்றும் பொது நிர்வாகச் செலவுகள் தவிர்ந்த தொகையில் 10 சத வீதமாகும்.

இலங்கையின் மீண்டெழும் செலவானது அண்மைக் காலங்களில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை விடவும் வேகமாக அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாய் உள்ளது. அதேவேளை நாட்டின் வரி வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சியானது தொடர்ச்சியாக பலவருட மதிப்பீட்டினை விட குறைவாகக் காணப்படுகின்றது. அடுத்ததாக பிரதானமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் அரசாங்கத்துறை அபிவிருத்திக்கு அவசியமான நிதிகளில் பெரும்பகுதியானது வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து கடன்கள், மற்றும் ஏனைய உதவிகள் மூலமும் மற்றும் சந்தையில் அபிவிருத்தி முறிகளை வெளியிட்டும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ் அனைத்து மூலங்களிலுமான நிதியீட்டத்திற்கு ஒரு நிதிச் செலவு காணப்படுகின்றது. ஆகவே அனைத்து செலவு அலகுகளும் வரவு செலவுத்திட்டங்களை பயனுள்ளதாக செலவு செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். இதன் போது ''பணத்திற்கான பெறுமதி'' மற்றும் ''செலவு வினைத்திறன்'' போன்ற கோட்பாடுகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு வேலைகளின் இரட்டைத் தன்மை மற்றும் வீண்விரயத்தை தவிர்ப்பதற்காக மாகாணத்திற்கு கிடைப்பதற்குரிய அனைத்து வளங்களையும் ஒரு பொருத்தமான முறையில் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

இச்சூழ்நிலையில், மாகாண சபைகளின் மூலதன மற்றறும் மீண்டெழும் ஆகிய இரு செலவுகள் தொடர்பான தேவைகளை அடையாளம் காணல் மற்றும் திட்டங்களை தயாரிக்கும் போது மாகாண அதிகாரிகள் பின்வரும் விடயங்களுக்கு முக்கிய கவணம் செலுத்துதல் வேண்டும்.

i. ஒவ்வொரு மாகாணத்திலும் மூல வளங்களை அடையாளம் காண்பதற்கான ஒரு செயலாற்றுகையை மேற்கொள்ளுதல்.
ii. முக்கியமான செயலாற்றுகை பிரமாணங்களைக் கொண்டு மாகாண செலவுகளின் அதி உச்ச பெறுபேறுகளை அடைந்து கொள்ளுதல்.
iii. தனியார்துறை முதலீட்டிற்கு வசதியளிக்கும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
iv. வர்த்தக ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான கருத்திட்டங்கள் மீது தனியார்த்துறை முதலீட்டினை முடியுமான அளவில் ஊக்குவித்தல்.
v. அரச தனியார் பங்குடமை மற்றும் கூட்டு முயற்சி போன்ற அனுகுமுறைகளை பயன்படுத்தி ஊள்ளூராட்சி மன்றங்கள் தமது சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு வழிநடாத்துதல்.

vi. மனித வள அபிவிருத்திக்கு அரச நிதியைப் பயன்படுத்தல். ஒரு சிறப்பான மனித வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிறப்பான சேவை வழங்கலை உறுதிப்படுத்தல்.
vii. அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான கருத்திட்டங்களில் இருந்தான நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மாகாண திட்டங்களை வகுத்தல்.
viii. 2016ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்கள் மீது கவனம் செலுத்தி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்.
ix. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான கட்டமைப்பு மீது கவனம் செலுத்தி மாகாண வருமான மூலங்களை விரிவாக்குவதனூடாக தேசிய வரவு செலவுத்திட்டத்திற்கான சுமையை குறைத்தல்.
x. பாதீட்டு செயன்முறையின் தொடக்கத்தில் இருந்தே பூச்சிய அடிப்படையிலான பாதீட்டு அனுகுமுறையை பின்பற்றி செயற்றிறனான நிதிப்பாவனையை உறுதி செய்தல் மற்றும் வேலைகளின் இரட்டைத்தன்மை மற்றும் விரயத்தையும் தவிர்த்தல்.
xi. தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் மற்றும் பெறுமதி சேர்ப்புக்கு அதிக சாத்தியத்தன்மையுடன் கூடிய உற்பத்தித் துறைக்கு கூடுதல் நிதியை ஒதுக்குதல்.
xii. நிதி, பௌதீக மற்றும் மனித வளங்களின் பயனுறுதியுள்ள பாவனையை உறுதிப்படுத்தும் நோக்கில் உப தேசிய மட்டங்களில் கண்காணிப்பு பொறிமுறையை உறுதி செய்தல்.
xiii. நடவடிக்கைகளின் இரட்டைத்தன்மை மற்றும் ஒருமித்த தன்மை ஆகியவற்றைத் தவிர்க்குமுகமாக புதிதாய் நிறுவனங்கள் உருவாகுவதைக் குறைத்தல்.
xiv. குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்தில் சாத்தியமான வருமான இயலளவை மேம்படுத்துதல்.
xv. உள்ளூராட்சி மன்றங்களின் சம்பளங்களை மீள் நிரப்புவதை நியாயப்படுத்தும் முகமாக அவற்றின் வருமான சாத்தியத்தன்மையை கருத்திற் கொண்டு சேமிப்புக்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கமானது உரிய கவனம் செலுத்தி ஒரு வரையறுக்கப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் கீழ் தேவையான கொள்கை மற்றும் ஒழுங்கு விதியிலான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். இது மாகாணத்தின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு வசதியேற்படுத்திக் கொடுக்கும். தேசிய மட்டத்தில் மற்றும் உப தேசிய மட்டத்தில் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பாக நிறுவனங்களுக்கிடையில் செங்குத்தாக மற்றும் கிடையான ஒருங்கிணைப்பினை உறுதி செய்யும் முகமாக மாகாணப் பட்டியல் மற்றும் இணைந்த பட்டியலில் வரையறை தேவை என்பதற்கான அங்கீகாரம் அளிக்கப்படல் வேண்டும்.

மாகாண சபைகளானது தமது பக்கத்தில் இருந்து இயலளவை கட்டியெழுப்புவதனூடாக நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக் கூறும் தன்மையை உறுதிப்படுத்தி தமது நல்லாட்சியை மேம்படுத்துவதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்குமிடையில் சிறப்பான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பானது ஒரு அர்த்தமுள்ள பெறுபேற்றினை கொண்டுவருவதற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

## 9. முன்னோக்கிய நகர்வு

நிதி ஆணைக்குழுவுக்கு அரசியல் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஆணையானது 1987 அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அரச பொறிமுறையின் கீழ் நாட்டில் சமாந்தரமான பிராந்திய அபிவிருத்திக்கு வசதி செய்து கொடுப்பதாகும். கடந்த மூன்று தசாப்த கால அனுபவத்தின்படி அனைத்து பங்குபற்றுனர்களினதும் அதாவது அரசாங்கம், மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள், தனியார்த்துறை மற்றும் சிவில் சமூகம் என்பவற்றின் அர்த்தமுள்ள ஆதரவு இன்றி நிதி ஆணைக்குழுவினால் மாத்திரம் தனித்து நின்று கடமைப்பாடான இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது.

இப்பின்னணிக்கு எதிராக, சிறப்பான கொள்கை வழிகாட்டல்கள் கட்டாயமாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இதன் மூலம்,

i. மாகாண பட்டியலின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பினை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.
ii. மாகாண மட்டத்தில் உள்ள இரட்டைத் தன்மை மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட நடவடிக்கைகளை குறைக்கும் வகையில் இணைந்த பட்டியலில் காணப்படும் விடயங்களை சீராக்குதல்.
iii. மாகாண மட்டத்தில் காணப்படும் வளங்களில் இருந்து உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாகாணங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்தல்.
iv. பொருத்தமான ஊக்குவிப்புக்களின் மூலம் பின்தங்கிய பிரதேசங்களில் தனியார்த்துறை முதலீட்டினை மேம்படுத்தல்.
v. மாகாண மட்டத்தில் காணப்படும் வளங்களின் கிடைப்பனவை கருத்திற் கொண்டு மக்களின் உண்மையான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குதல்.
vi. அரசாட்சியின் மூன்று மட்டங்களிலும் அபிவிருத்தி செயன்முறையின் செயற்பாடானது சிறப்பாக இடம்பெறுவதை உறுதி செய்துகொள்வதற்கு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உப தேசிய நிறுவனங்களுக்கிடையில் செங்குத்தாக மற்றும் கிடையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல்.
vii. ஒரு பதவி அணி மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.
viii. மீண்டெழும் செலவிற்கான அதிகபட்ச சுமையினை குறைக்கும் வகையில் தற்போதுள்ள ஆளணியினை சிறப்பான முறையொன்றின் கீழ் பதவியமர்த்துவதற்காக முறையான கொள்கை ஒன்றை அமுல்படுத்துதல்.
ix. மாகாண மட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்திலும் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக ஒத்திசைவான கொடுப்பனவு முறையொன்றை உருவாக்குதல்.

நிதி ஆணைக்குழுவானது ஆசிய மன்றத்தின் உதவியுடன் மாகாண மட்டத்தில் அரச தனியார் கூட்டு முயற்சியை ஊக்குவிப்பதற்கான சாத்தியத் தன்மையை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது தொடர்பாக அரச தனியார் கூட்டு முயற்சியை அறிமுகம் செய்வதன் தாக்கங்கள் மற்றும் சிக்கல்களை கண்டறிவதற்காக கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

உதித்த எச். பலிஹக்கார
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - தலைவர்

இந்திரஜித் குமாரசுவாமி
பதவி வழி உறுப்பினர் - ஆளுனர் இலங்கை மத்திய வங்கி

ஆர்.எச். சமரதுங்க
பதவி வழி உறுப்பினர் - திறைசேரியின் செயலாளர்

வீ. கணக சபாபதி
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

எச்.எம். ஸபருல்லாஹ்
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

**பின் இணைப்புI : 2010 – 2016 காலப்பகுதியில் பி.அ.கொயின் கீழ் ஒதுக்கியமற்றும் விடுவிக்கப்பட்டதொகைகள்**

*(ரூபாமில்.)*

| மாகாணம் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கம் | விடுவிக்கப் பட்டது | ஒதுக்ம் | விடுவிக் கப்பட்ட து | ஒதுக்ம் | விடுவிக் கப்பட்ட து | ஒதுக்ம் | விடுவிக் கப்பட்ட து ூ | ஒதுக்ம் | விடுவிக்கப்ப ட்டது ஆகஸ்ட்க்குப ின் |
| மேல் | 427 | 180 | 370 | 370 | 475 | 292.5 | 525 | 2641 | 460 | 50 |
| மத்தி | 400 | 218 | 321 | 192.6 | 430 | 129 | 500 | 2575 | 423 | 26 |
| தென் | 347 | 189 | 295 | 177 | 380 | 255 | 385 | 2211 | 413 | 69 |
| வடக்கு | 294 | 161 | 195 | 195 | 280 | 280 | 400 | 2399 | 475 | 40 |
| வடமேல் | 320 | 175 | 270 | 162 | 350 | 290 | 425 | 2151 | 375 | 10 |
| வடமத்தி | 293 | 1420 | 230 | 742 | 350 | 192.5 | 375 | 2658 | 400 | 100 |
| ஊவா | 320 | 175 | 240 | 144 | 330 | 179 | 375 | 2229 | 475 | 115 |
| சப்ரகமுவ | 357 | 195 | 252 | 151 | 335 | 335 | 400 | 2966 | 514 | 124 |
| கிழக்கு | 267 | 146 | 217 | 130 | 340 | 227 | 400 | 1830 | 465 | 45 |
| **மொத்தம்** | **3,025** | **2,858** | **2,390** | **2,264** | **3,270** | **2,180** | **3785** | **21660** | **4000** | **579** |

*மூலம்:நிதிஆணைக்குழுமற்றும் தேசியதிறைசேரி*

ூபி.அ.கொமற்றும் மா.கு.அ.கொஉள்ளடற்களாக

**பின் இணைப்புII : 2012 – 2016 காலப்பகுதிக்கானமா.கு.அ.கொதொடர்பானஒதுக்கம் மற்றும் விடுவிப்புகள்**

*(ரூபாமில்.)*

| மாகாணம் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கம் | விடுவிக் கப்பட்ட து | ஒதுக்க ம் | விடுவிக் கப்பட்ட து | ஒதுக்க ம் | விடுவிக் கப்பட்ட து | ஒதுக்க ம் | விடுவிக் கப்பட்ட து ூ | ஒதுக்கம் | விடுவிக் கப்பட்ட து ஆகஸ்ட் க்குபின் |
| மேல் | 1,990 | 491 | 1,701 | 1,062 | 2,280 | 1,078 | 2,598 | 2641 | 3640 | 300 |
| மத்தி | 3,013 | 856.88 | 3,254 | 889 | 3,497 | 1,264 | 3,879 | 2575 | 4751 | 303 |
| தென் | 1,818 | 813.85 | 1,634 | 785 | 1,715 | 1,049 | 3,997 | 2211 | 3976 | 374 |
| வடக்கு | 3,568 | 947.37 | 3,692.7 | 836 | 5,551 | 1,328 | 5,038 | 2399 | 8343 | 400 |
| வடமேல் | 1,836 | 816.85 | 1,867 | 765 | 2,120 | 1,933 | 2,500 | 2151 | 4334 | 305 |
| வடமத்தி | 2,806.5 | 717.72 | 2,139.5 | 741 | 3,043 | 1,054 | 2,230 | 2658 | 4065 | 100 |
| ஊவா | 3,117 | 805.81 | 2,596 | 838 | 3,543 | 2,282 | 3,361 | 2229 | 3570 | 200 |
| சப்ரகமுவ | 2,648 | 709.66 | 2,765 | 795 | 4,245 | 1,684 | 4,360 | 2966 | 4061 | 367 |
| கிழக்கு | 3,917 | 1,108.25 | 4,915 | 1,062 | 3,206 | 1,595 | 2,469 | 1830 | 4267 | 160 |
| **மொத்தம்** | **24,713.5** | **7,267.39** | **24,564.2** | **7,773** | **29,200** | **13,267** | **30,432** | **21660** | **41007** | **2509** |

*மூலம்:நிதிஆணைக்குழுமற்றும் தேசியதிறைசேரி*

ூபி.அ.கொமற்றும் மா.கு.அ.கொஉள்ளடற்களா

## பிண் இணைப்புIII: மொத்தக் கொடையின்ஒதுக்கம் மற்றும் விடுவிப்பு 2012 - 2016

*(ருபா மில்.)*

| மாகாணம் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கம் | விடுவிக்கப்பட்டது | ஒதுக்கம் | விடுவிக்கப்பட்டது | ஒதுக்கம் | விடுவிக்கப்பட்டது | ஒதுக்கம் | விடுவிக்கப்பட்டது | ஒதுக்கம் | விடுவிக்கப்பட்டது ஜுலை 2016க்கு பின் |
| மேல் | 9,011 | 8,894 | 8,502 | 9,691 | 11,699 | 11,699 | 18,842 | 18,842 | 21,744 | 9,240 |
| மத்தி | 13,76 | 13,049 | 14,864 | 15,687 | 17,917 | 17,917 | 23,542 | 23,542 | 23,375 | 12,033 |
| தென் | 11,803 | 11,907 | 12,908 | 13,586 | 15,785 | 15,785 | 21,459 | 21,459 | 20,508 | 13,483 |
| வடக்கு | 8,557 | 8,500 | 10,075 | 10,795 | 12,642 | 12,642 | 16,768 | 16,268 | 16,174 | 10,052 |
| வடமேல் | 12,651 | 11,921 | 14,118 | 14,846 | 16,413 | 16,413 | 21,705 | 21,634 | 20,798 | 12,796 |
| வடமத்தி | 7,005 | 6,776 | 7,346 | 7,765 | 10,594 | 10,594 | 13,616 | 13,616 | 12,839 | 8,008 |
| ஊவா | 9,459 | 9,032 | 10,263 | 10,758 | 12,500 | 12,500 | 16,482 | 16,237 | 16,250 | 9,863 |
| சப்ரகமுவ | 11,243 | 10,737 | 13,088 | 13,606 | 14,809 | 14,809 | 18,410 | 18,410 | 18,219 | 10,689 |
| கிழக்கு | 11,385 | 10,737 | 11,635 | 12,066 | 13,784 | 13,784 | 17,530 | 17,475 | 16,511 | 10,633 |
| **மொத்தம்** | **81,114** | **91,552** | **102,800** | **108,801** | **126,143** | **126,143** | **168,354** | **167,483** | **166,418** | **96,797** |

*மூலம்:நிதிஆணைக்குழுமற்றும் தேசியதிறைசேரி*

## பிண் இணைப்புIV: மூலங்களின் அடிப்படையில் மாகாணஸ்களின் வருமானம் சேகரிப்பு– 2015

*(ரூபா‘000)*

| மாகாணம் | இலக்குமுத்திரைத் தீர்வைமற்றும் நீதிமன்றதண்டப்பணம் உள்ளடங்களாக - 2015 | அதிகாரம் பகிர்வளிக்கப்பட்டவழிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மோ.வி. வரிமூ | மோட்டார் வாகனஅனுமதிப் பத்திரகட்டணம் | கலால் வரி | ஏனையவை மூமூ | முத்திரைத் தீர்வை | நீதிமன்றத் தண்டப்பணம் | |
| மேல் | 13,675,000 | 41,700 | 3,752,050 | 722,640 | 1,588,410 | 12,172,360 | 746,520 | 19,023,680 |
| மத்தி | 2,090,000 | 8,061 | 806,045 | 415,940 | 368,788 | 1,357,856 | 73,144 | 3,029,834 |
| தென் | 2,372,000 | 2,538 | 945,366 | 170,811 | 391,080 | 1,499,959 | 21,284 | 3,031,038 |
| வடக்கு | 348,000 | - | 282,581 | - | 140,119 | 192,375 | 24,307 | 639,382 |
| வடமேல் | 2,620,000 | 766 | 1,131,128 | 163,545 | 293,502 | 1,401,741 | 358,065 | 3,348,746 |
| வடமத்தி | 960,000 | 8,522 | 487,358 | 57,934 | 337,837 | 116,773 | 192,131 | 1,200,556 |
| ஊவா | 630,000 | 2,335 | 346,774 | 126,013 | 310,180 | 225,518 | 71,165 | 1,081,985 |
| சப்ரகமுவ | 1,065,000 | 384,333 | 625,786 | 112,730 | 248,254 | 568,507 | 127,300 | 2,066,909 |
| கிழக்கு | 740,000 | - | 334,776 | 50,244 | 194,769 | 318,743 | 163,415 | 1,061,947 |
| **மொத்தம்** | **24,500,000** | **448,255** | **8,711,865** | **1,819,857** | **3,872,939** | **17,853,832** | **1,777,330** | **34,484,078** |

*மூலம்: மாகாணசபைகளின் வரவுசெலவுத்திட்டம் - 2015*

*மூ2010 வரைசேகரிக்கபடவேண்டியமொத்தவிற்பணைபுரள்வு*

*மூமூ ஏனையவைவாடகை,வட்டி,பரீட்சைக் கட்டணம், மூலதனச் சொத்துக்களின் விற்பணைவருமாணம்,பந்தயவரிஉள்ளடங்களாக.*

## பிண் இணைப்புV : உள்ளூராட்சிமன்றங்களுக்குமாற்றப்படவுள்ளமுத்திரைத் தீர்வைமற்றும் நீதிமன்றதண்டப்பணம் -2017

| மாகாணம் | முத்திரைதீர்வை *(ரூ"000)* | நீதிமன்றத் தண்டப்பணம் *(ரூ"000)* | மொத்தம் *(ரூ"000)* | % ழக "சழஎைெஉயைட ளாயசந ழக குஉள குழசநஉயளவ |
|---|---|---|---|---|
| மேல் | 14,500,000 | 800,000 | 15,300,000 | 39 |
| மத்தி | 1,600,000 | 85,000 | 1,685,000 | 4 |
| தென் | 1,450,000 | 225,000 | 1,675,000 | 11 |
| வடக்கு | 458,000 | 65,000 | 523,000 | 3 |
| வடமேல் | 1,600,000 | 350,000 | 1,950,000 | 17 |
| வடமத்தி | 125,000 | 190,000 | 315,000 | 9 |
| ஊவா | 280,000 | 100,000 | 380,000 | 5 |
| சப்ரகமுவ | 570,000 | 130,000 | 700,000 | 6 |
| கிழக்கு | 375,000 | 100,000 | 475,000 | 5 |
| **மொத்தம்** | **20,958,000** | **2,045,000** | **23,003,000** | **100** |

*மூலம்:நிதிஆணைக்குழு*

## பிண் இணைப்புVI: நிதிஒதுக்கீட்டு சூத்திரத்திற்குதெரிவுசெய்யப்பட்டமாறிகள– 2017

| மாகாணம் | சனத்தொகை - 2015 *("000)* | மாகாணமொ.உ.உ *(ரூபாமில்.)* | தலைக்குரியவ றுமைச் சுட்டி 2012.˙.13 | சுராசரிதலாவ ருமானம் 2012.˙.13 *(சுள.)* | மருத்துவஉத் தியோகத்தருக் கானநபர்களின் எண்ணிக்கை 2013 | விஞ்ஞானதுறையில் பல்கலைக்கழகத்திற்குதெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை. % -2015 |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 5,979 | 4,320 | 2.0 | 10,567 | 797.0 | 29.6 |
| மத்தி | 2,658 | 1,073 | 6.6 | 7,150 | 953.8 | 11.6 |
| தென் | 2,556 | 1,112 | 7.7 | 7,624 | 1271.9 | 17.9 |
| வடக்கு | 1,094 | 367 | 10.9 | 5,540 | 1102.8 | 5.2 |
| வடமேல் | 2,448 | 1,100 | 6.0 | 7,927 | 1510.7 | 10.4 |
| வடமத்தி | 1,312 | 523 | 7.3 | 7,824 | 1532.9 | 4.6 |
| ஊவா | 1,316 | 511 | 15.4 | 6,110 | 1470.3 | 5.4 |
| சப்ரகமுவ | 1,988 | 689 | 8.8 | 7,229 | 1476.9 | 9.8 |
| கிழக்கு | 1,615 | 597 | 11.0 | 5,385 | 1178.0 | 5.6 |
| **இலங்கை** | **20,966** | **10,292** | **6.7** | **7,881** | **1,081** | **100** |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம்,மத்தியவங்கி,சுகாதாரஅமைச்சு,*

**பிண் இணைப்புVII : மொ.உ..உயில் மாகாணங்களின் பங்களிப்புசந்தைவிலைகளில் 2006- 2015**

*(சுள.அ)*

| மாகாணம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1,472,060 | 1,732,279 | 2,003,055 | 2,216,346 | 2,512,908 | 2,905,159 | 3,243,854 | 3,643,180 | 4,358,000 | 4,611,000 |
| மத்தி | 259,829 | 319,095 | 430,579 | 473,416 | 562,744 | 644,159 | 775,580 | 959,694 | 1,076,000 | 1,152,000 |
| தென் | 292,498 | 374,105 | 464,723 | 509,053 | 598,976 | 726,996 | 834,287 | 954,568 | 1,097,000 | 1,160,000 |
| வடக்கு | 81,978 | 104,202 | 139,001 | 155,828 | 189,740 | 241,200 | 277,828 | 311,468 | 349,000 | 391,000 |
| வடமேல் | 267,102 | 342,653 | 438,606 | 466,041 | 534,831 | 652,136 | 760,148 | 542,845 | 1,155,000 | 1,224,000 |
| வடமத்தி | 117,848 | 140,391 | 206,749 | 221,294 | 266,954 | 300,042 | 379,243 | 886,819 | 542,000 | 607,000 |
| ஊவா | 125,410 | 160,747 | 200,102 | 219,293 | 253,177 | 292,463 | 361,975 | 438,862 | 557,000 | 587,000 |
| சப்ரகமுவ | 178,411 | 226,106 | 281,431 | 294,659 | 350,806 | 406,566 | 467,238 | 409,979 | 711,000 | 781,000 |
| கிழக்கு | 143,523 | 177,863 | 246,436 | 279,363 | 333,969 | 375,288 | 478,401 | 526,185 | 605,000 | 671,000 |
| **மொத்தம்** | **2,938,659** | **3,577,441** | **4,410,682** | **4,835,293** | **5,604,104** | **6,544,009** | **7,578,554** | **8,673,600** | **10,450,000** | **11,184,015** |

*மூலம்: இலங்கைமத்தியவங்கி*